# கொலோசெயர்

## பகுதி –1

## [1:1 – 2:7]

குறிப்புகள்




சகோ. R. ஜோஸ்
கன்னியாகுமரி
கிறிஸ்துவின் சபை

# கொலோசேயர்

## முன்னுரை:

### கொலோசே பட்டணம்:


இந்த நிருபம் “கொலோசே” பட்டணத்தில் இருந்த சபையாருக்கு பவுலால் எழுதப்பட்டது (1:1,2).கொலோசே பழங்கால பட்டணமாய் சிறிய ஆசியாவில் அமைந்திருந்த, பிரிகியாவிலிருந்த பட்டணம். செல்வாக்கு படைத்த இரண்டு பட்டணங்கள் ஒன்றுக்கொண்டு அருகில் இருந்தன – லாவோமிக்கேயா, மேற்குத் திசையில், பன்னிரண்டாவது மைலில் இருந்தது, வடமேற்கில் ஹைரோபோலி பதிமூன்றாவது பேலில் இருந்தது. இந்த கொலோசே பட்டணம் எபேசு நகரத்திற்கு தென்பகுதியில் எண்பது அல்லது அதற்கு சற்றேறப் குறையலான மைல்கள் தொலைவில், லவோதிக்கேயாவுக்கு அருகில் இருந்தது. (2:1; 4:15,16). கொலோசே ஆசியா மைனரின் ரோமன் மாகாணத்தில் ஒரு வணிக மையமாக இருந்தது, இது ஒரு பெரிய வர்த்தக பாதையில் கட்டப்பட்டது. இது கொலோசினஸ் எனப்படும் ஊதா நிற சாயமிடப்பட்ட கம்பளிக்கு பிரபலமானது.




பவுல் இந்த நிருபத்தை எழுதும் போது கொலோசேயில் கிறிஸ்துவின் சபையானது இருந்தது.

கொலோசே பட்டணத்தில் ஆரம்பத்தில் குடியேறினவர்கள் பிரிகியா மற்றும் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்கள். யூதர்களும் பெரும் இருந்தனர்.

கொலோசே கலாச்சார ரீதியாகவும், மதரீதியாகவும் பல வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. பல தத்துவங்கள் இருந்தன.




இன்று கொலோசே மறக்கப்பட்டு போன ஒரு மண்மேடாக துருக்கி பகுதியில் காணுகிறது. கி.பி 60 -யில் எற்ப்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டது, அதன்பின் இந்த பகுதியில் இருந்த மக்கள் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது. 1192 (அ) 1193 -யில் 1193 முழுவதும் அழிக்கப்பட்டது.

**கொலோசேயில் இருந்த சபை:**

யார் மற்றும் எப்பொழுது இந்த பகுதியிலும் லவோதிக்கேயாவிலும் சபையை ஸ்தாபித்தார் என சரியாக தெரியவில்லை, இந்த நிருபம் எழுதப்பட்ட போது பவுல் இந்த சபையை பார்த்ததில்லை, (கொலோ 2:1). கொலோசே சபையின் ஊழியக்காரனாய் இருந்த எப்பாப்பிராவின் மூலமாய் பவுல் இந்த சபையை குறித்து கேள்விப்பட்டார் (1:6,7,8). ஆனால் இந்த பகுதியில் சபையின் ஆரம்பத்தை குறித்து நாம் சில காரியங்களை பிற வேதபகுதிகளிலிருந்து அறிந்து கொள்ளலாம், 1) அப் 2 அதிகாரத்தில் எருசலேமில் முதலில் சுவிசேஷம் பிரசிங்கிக்கப்பட்ட போது அங்கே கொலோசேயில் வாழ்த்து கொண்டிருந்த யூதர்கள் அங்கு சென்று சுவிசேஷத்துக்கு கீழ்படித்து, சுவிசேஷத்தை தங்களுடைய சொந்த ஊருக்கு எடுத்து சென்றிருக்கலாம். 2) அப் 19:10 -யில் பவுல் எபேசுவில் 3 ஆண்டுகள் இருந்து, திறன் என்பவருடைய வித்தியாசாலையில் தேவனுடைய வார்த்தையை போதித்த போது அங்கு எப்பாப்பிராவோ அல்லது வேறே யாராவதோ அங்கு சுவிசேஷத்தை கேட்டு, அதை கொலோசேக்கு கொண்டு சென்றிருக்கலாம். (அப் 19:9,10,26). எப்படியிருந்தாலும் கொலோசேயிலும், லவோதிக்கேயாவிலும் கிறிஸ்துவின் சபையானது இருந்தது என்பதும், அதற்கு எப்பாப்பிரா ஊழியனாய் இருந்தான் என்பதும் தெளிவு(கொலோ 4:12).

**எழுதப்பட்ட நோக்கம் மற்றும் மைய கருத்து:**

கொலோசே பட்டணத்திற் சபைக்கு ஊழியக்காரனாய் இருந்த எப்பாப்பிராவின் மூலமாய் பவுலுக்கு இந்த சபையை குறித்து தெரியவந்தது. (கொலோ 1:7,8). இந்த சபையாரின் நிலை நன்றாய் இருந்த போதிலும் (2:5), இவர்களை எச்சரிக்கவும் (2:4-8,19) இன்னும் விசுவாசத்தில் உறுதியாய் நின்று கிறிஸ்துவுக்குள் தேறினவர்களாய் நிற்காவும் (1:28; 4:12) அவர்களுக்கு புத்தி சொல்ல இந்த நிருபம் எழுதப்பட்டது.

கொலோசேயர் புத்தகத்தின் மைய கருத்தாக "கிறிஸ்து தலையாகயிருக்கிறார்" (கொலோ 1:18; கொலோ 2:10,18) என்பதை நாம் கூறலாம். நம்முடைய சரீரத்தில் தலையின் வேலை என்ன? இது அதிகாரம் எல்லாம் கிறிஸ்துவினிடத்தில் தான் இருக்கிறது என்பதை நமக்கு காண்பிக்கிறது. தலையில்லாமல் ஒரு சரீரம் செயல்பட முடியுமா? அதே போலதான் நாம் நம்மை "ஆதரிக்கிற" தலையைப் பற்றிக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் முதன்மைதுவத்தை முக்கியப்படுத்துவது பவுலின் நோக்கமாய் இருந்தது (கொலோ 1:14-17). தேவனுக்கு பிரியமான விவேகம், அறிவு மற்றும் ஞானம் இவைகள் இந்த நிருபத்தில் பவுல் அதிகம் பயன்படுத்துகிறார் (கொலோ 1:9,10; 2:3; 3:16), கொலோசேயர்கள் உலக ஞானத்தையும், தத்துவங்களையும் பற்றி கொண்டு கிறிஸ்துவை விட்டு பின்வாங்க கூடாது.

**"தலையை பற்றிக்கொள்ளுங்கள்" – கொலோ 2:18**

**காலம் மற்றும் இடம்:**

இந்த நிருபம் கி.பி 60-62 -யில் பவுல் ரோமபுரியில் கைதியாக இருந்த போது பவுலால் எழுதப்பட்டது. (கொலோ4:3,18), இந்த நேரத்தில் கொலோசே பட்டணத்தில் வாழ்ந்த பிலமேனுக்கு பவுல் நிருபத்தை எழுதுகிறார். பவுல் ரோமபுரியில் கைதியாக இருந்த போது எபேசியர், பிலிப்பியர், கொலோசேயர் மற்றும் பிலோமோன் புத்தகத்தை ஏழுதினார்.(அப் 28:30,31)

அதிகாரம் ஒன்று

1:1-29

## அ. பவுலின் நன்றி:1:1-14

1. **(வ3-5) விசுவாசம்,அன்பு, நம்பிக்கைகாக தேவனுக்கு நன்றி செலுத்துதல்.**
    a. அடிப்படையான மூன்று காரியங்கள் (1 கொரி 13:13) – இந்த மூன்று காரியங்களும் கொலோசேயர்களின் வாழ்க்கையில் இருந்ததை பவுல் கேள்விப்பட்டார்(வ 6; 2:5)
        i. பார்க்கவும் – 1 தெச 1:2
            1. கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் (வ 3) – Faith, assurance
                a. விசுவாசம் என்பது என்ன?(எபி11:1,6) நம்பிக்கையின் உறுதியாக, நிச்சியமாக இருக்கிறது. விசுவாசமே நம்முடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்ப்படுத்துகிறது (2:5), தேவன் மீது கொண்டிருக்கும் நம்முடைய விசுவாசம் கிரியைகள் மூலமாய் வெளிவருகிறது. (1 தெச 1:2; யாக் 2:18)
                b. நம்முடைய விசுவாசம் யார்\எதன்? மீது இருக்கிறது என்பது முக்கியமானது, பவுல் இதில் தெளிவனவராய் இருந்தார் (1 கொரி 2:1-5), விசுவாசம் தேவனுடைய பெலத்தினால் நிற்க வேண்டும் என்பதை பவுல் அறிந்திருந்தார். சுவிசேஷமே நம்முடைய தேவபெலனாய் இருக்கிறது (ரோம 1:16; ரோம 16:26). அதாவது நம்முடைய தேவபெலமாய் இருப்பது இயேசு கிறிஸ்துவாக இருக்கிறார். நம்முடைய விசுவாசம் இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலின் மீது இருப்பதால், அது தான் நம்முடைய வாழ்க்கையிலும், கொலோசேயர்களின் வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்ப்படுத்தியது,ஏற்ப்படுத்துகிறது.(1 பேது 1:21; 1 கொரி 15:32,17).நம்முடைய விசுவாசம் கிறிஸ்துவின் மீது இருப்பது அவசியம், மனிதர்கள் மேல் அல்ல.
            2. பரிசுத்தவான்கள் மேல் உள்ள அன்பு (வ 3)
                a. அன்பு முக்கியமானது (1 கொரி 13:13)

b. தேவனிடம் விசுவாசமாயிருக்கிறவர், சகோதரரிடம் அன்பு கூற வேண்டும். (1 யோவா 4:20; 1 பேது 1:20,21).

c. அன்பின் பிரயாசம் ( 1 தெச 1:2)

    i. அன்பின் பிரயாசம் (labor of love) – தேவன் மீது இவர்கள் கொண்டிருந்த அன்பு, இவர்களின் பிரயாசம் மூலமாய் வெளிப்பட்டது. பிரயாசம் = labor = முயற்சி, விளைவு, சோர்வு போன்றவற்றை குறிக்கிறது. அன்பானது கஷ்டத்தையும், அர்ப்பணிப்பையும் செய்யும் விருப்பத்தை நமக்கு ஏற்ப்படுத்த கூடியதாக இருக்கிறது. (லூக் 11:5- 8). தேவன் மீதான நம்முடைய அன்பு கீழ்படிதல் மூலமாய் வெளிப்படுகிறது (யோவா 14:15,21,23)

d. சபையாரை நாம் நேசிக்க கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

3. நம்பிக்கை (வ 4)

a. பரலோகத்தை குறித்த நம்பிக்கை

    i. இந்த நம்பிக்கை தான் கிறிஸ்தவர்களாகிய நம்மையும், மற்றவர்களையும் பிரிக்கிறதாய் இருக்கிறது. நாம் பரலோகத்தின் மீதான நம்பிக்கைவுள்ளவர்களாய் சத்தியத்திற்கு கீழ்படிந்திருப்பதால் நம்முடைய நம்பிக்கை ஜீவன் உள்ளது. (1 பேது 1:4) ஒருவர் இந்த பூமியில் என்னுடைய வாழ்க்கை மரணத்துடன் முடித்துவிடும் என்று நம்பி வாழ்த்து மரிக்கும் போது அவருடைய நம்பிக்கை செத்ததாய் இருக்கிறது. அவருக்கும் மிருகத்திற்கும் வித்தியாசம் இல்லை. (சங் 49:6-20)

    ii. இந்த நம்பிக்கை தான் நம்மை உற்சாகப்படுத்துகிறது\உற்சாகப்படுத்துகிறதாய் இருக்க வேண்டும்.(2 கொரி 5:1-10; எபி 11:8-16).

    iii. நம்பிக்கை என்பது "எதிர்பார்ப்பு" "காத்திருப்பதை" அடிப்படையாக கொண்டது. (கலா 5:5; ரோம 8:25). ஏதோ கிடைத்தால் நலம் என்கிற எண்ணம் அல்ல, உறுதியான நம்பிக்கையோடே எதிர்பார்க்குதலும் விசுவாசத்தின் மேல் கட்டப்பட்ட முழு நிச்சயமுமாகும். (எபி 11:1)

2. **எப்பாப்பிரா (1:6-8)**
    a. சத்திய வசனமாகிய சுவிசேஷம் (வ 6) – நம்முடைய நம்பிக்கை சுவிசேஷத்தினால் வந்தது.
        i. சுவிசேஷம் என்பது என்ன?
            1. நற்செய்தி, சுவிசேஷமானது இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதலை மையமாக கொண்டிருகிறது (1 கொரி 15:1-3), அது இயேசு கிறிஸ்துவை பற்றியது (ரோம 16:26); நியாயத்தீர்ப்பின் செய்தியாக இருக்கிறது. (ரோம 2:16). சுவிசேஷம் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டிய முறைப்படி நடந்து கொள்வதையும் உள்ளடக்கிப் பேசுகிறது. (பிலி1:27).
            2. சுவிசேஷத்தின் முக்கியமான நோக்கம் இரட்சிப்பாகவே இருக்கிறது (ரோம 1:16; 1 கொரி 1:18); மரணத்திற்கு நேராய் இருப்பவருக்கு ஜீவனுக்கான செய்தியை கூறும் செய்தி நற்செய்தியக இருக்கிறது.( 2தீமோ 1:10) ஒருவர் சுவிசேஷத்தின் சத்தியத்தை கேட்டு, விசுவாசித்து கீழ்படியும் போது அவர் இரட்சிக்கப்படுகிறார் (மாற் 16:15,16), தொடர்ந்து சுவிசேஷத்தில் நிலைத்திருக்கும் போது அவர் இரட்சிப்பை பாதுகாக்கிறார். (1 கொரி 15:1-3;கொலோ 1:22), சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையே ஒருவரை கீழ்படியவும், தேவனுக்கு பிரியமாய் இருக்கவும் தூண்டுகிறது. (அப் 24:15,16; அப் 17:11; 1 தெச 2:13).அதுவே அவருடைய வாழ்க்கையை மாற்ற கூடியதாக இருக்கிறது. (லூக் 8:15)
            3. உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிரா (வ 7,8)
                a. “உடன்வேலையாள்” - fellow servant; 1கொரி 3:5-9; பவுல் எப்படி சுவிசேஷத்திற்காக வேலையாளாய் இருக்கிறோரோ? அதைப்போலவே எப்பிப்பிரவும் வேலைக்காரனாய் இருக்கிறான். (எபே 6:19).
                b. “உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற” – கொலோ 4:12; பிலோ 23. எப்பாப்பிராவை ஊழியக்காரனாய் மாற்றியது எது? சத்தியவசனமாகிய சுவிசேஷம் தான்(வ 6). சுவிசேஷத்தை அறிந்த ஒரு கிறிஸ்தவர் அதை மற்றவர்களுக்கு போதிக்கும் படி எதிர்பார்க்கப்படுகிறது. (2 தீமோ 2:2) = உதாரணம் = அப்பொல்லோ (அப் 18:24-28). எப்பாப்பிரா

உண்மையுள்ள ஊழியக்காரனாய் இருப்பது என்பது அவருடைய தன்மை நமக்கு காண்பிக்கிறதாக இருக்கிறது. ஊழியக்காரனின் வேலை என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கை முழுவதையும் மாற்ற கூடியதாக இருக்கிறது. எப்பாப்பிரா கொலோசேயர்கள் **"தேவனுக்குச் சித்தமானவைகளெல்லவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சியமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று"** பிரயாசப்பட்டார். கொலோ 4:12 இதைதான் ஊழியர்களாகிய நாம் செய்ய வேண்டும். (கொலோ 1:28)

3. **பவுலின் ஜெபம் (1:9-11)**
   a. எப்பாப்பிரா மூலமாய் கொலோசேயர்களை பற்றி கேள்விப்பட்ட பவுல் அவர்களுக்காக தேவனிடம் ஜெபம் செய்கிறார். (வ9-11)
      i. **"எல்லா ஞானத்தோடும்"** (வ 9) – ஞானம் என்பது நல்லது மற்றும் கெட்டது என்பவை பிரித்துபார்த்து நல்லது பின்பற்ற முடிவெடுப்பதே ஞானமாகும். (1 இராஜா 3:9); நம்முடைய ஞானம் இயேசு கிறிஸ்துவாக இருக்கிறார் (கொலோ 2:3), இயேசு கிறிஸ்துவே தேவனை பிரியப்படுத்துவதற்கான வழியை நமக்கு கற்றுக்கொடுக்கிறார், அவருடைய உபதேசத்தின் படி நடக்கும் போதே நாம் தேவனை பிரியப்படுத்துகிறோம் (கொலோ 3:16; கொலோ 4:5). கிறிஸ்தவர்களாகிய நாம் இப்பிரபஞ்சத்தின் ஞானமுடையவர்களாய் நடக்காமல், ஆவிக்குரியவர்களாய் இருக்க வேண்டும் (1 கொரி 2:6,7; 1கொரி 2:14,15), தேவனுடைய வார்த்தையே நம்மை ஞானமுள்ளவர்களாய் வாழ செய்யும் (சங் 119:98; 100; 2 தீமோ 3:15-17).நம்முடைய ஞானத்திற்காக ஜெபம் செய்ய வேண்டும் (யாக் 1:5).
      ii. **"ஆவிக்குரிய விவேகம்"** (வ 9) – spiritual understanding – புரிந்துக்கொள்ளுதல், புத்தி (லூக் 2:47; 1 கொரி 1:19). நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை புரிந்துக்கொள்வது அவசியம். (எபே 1:18,19), தேவன் எனக்கு என்ன கொடுத்திருக்கிறார்\கொடுப்பார் என்பதை நான் அறிந்துக்கொள்ளாத போது நான் எப்படி தேவனை பிரியப்படுத்த முடியும்.
      iii. **"அவருடைய சித்தத்தை அறிகிற அறிவு"** (வ 9) – கொலோசேயர் அடிப்படையான காரியங்களில் நின்றவிட கூடாது, அவர்கள் தேறினவர்களாய் இருக்கவேண்டுமென்றால், அவர்கள் கடந்து செல்ல வேண்டும் (எபி 6:1,2), அறிவே நம்மை தேறினவர்களாய் மாற்றுகிறது, (1 கொரி 13:11-13; எபே 4:14-16), வேத அறிவை

கற்றுகொண்றதை எப்படி வாழ்க்கையில் பயன்படுத்துகிறார் என்பதலிருந்தே அவர் தேறினவரா என்பதை நாம் அறிந்துக்கொள்ள முடியும். தேவனுடைய சித்ததை நான் அறியாமல் அவரை பிரியபட்டுத்த முடியாது.

iv. **“நற்கிரியைகளுமாகிய கனிகளை தந்து”** (வ 10) – கனி என்பது ஒரு மரத்தின் பலனாக இருக்கிறது, கிறிஸ்தவர்களின் வாழ்க்கையானது, பலனை தர கூடியதாக இருக்க வேண்டும். நம்மிடம் தேவன் நற்கிரியைகளாகிய பலனை எதிர்பார்க்கிறார். (யோவா 15:1-7; எபே 2:10; தீத் 3:14; தீத் 3:8; எபி 10:24,25)

v. **“தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து”** (வ 10) – தேவனை அறிந்துக்கொள்வதே முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது.(எரே 9:23-24; யோவா 17:3; 2 தெச 1:7; லூக் 10:20-24; அப் 17:27; ரோம 1:19,20); தேவனைப்பற்றி அறிந்துக்கொள்வதில் நாம் தொடர்ந்து வளர வேண்டியது அவசியமாய் இருக்கிறது. (எபே 3:16-19).

vi. **“கர்த்தருக்கு பிரியமுண்டாக அவருக்கு பாத்திரராய் நடந்துகொள்ளுவும்” (வ 10)** – நாம் ஆவிக்குரிய ஞானத்தையும், விவேகத்தையும், அறிவை பெற்றிருப்பதே தேவனைப்பிரியப்படுத்துவதற்க்காத தான், நம்மை சிருஷ்டித்த அவரை பிரியப்படுத்தும் கருவியாக நாம் இருக்க வேண்டும் (1 தெச 4:1; சங் 143:10)

vii. **சந்தோஷத்தோடு கூடிய எல்லா பொறுமையும், நீடிய சாந்தமும்** (வ 11)

1. சந்தோஷம் – joyfulness – இந்த சந்தோஷம் பொறுமையோடும், நீடிய சாந்தத்தோடும் தொடர்புடையதாய் இருக்கிறது. சந்தோஷம் என்பது ஒருகாரியத்தை செய்து முடித்த பின்பு அதன் விளைவாக கிடைக்கும் உணர்வாக இருக்கிறது, அல்லது ஒரு வேளையை செய்வதால் கிடைக்க போகும் பலன் மீதான நம்பிக்கையின் விளைவாக வரும் காரியமாக சந்தோஷம் இருக்கிறது.( 1தெச 2:19,20; பிலி 4:1; ரோம 12:12); நம்முடைய சந்தோஷம் பரிசுத்த ஆவியினால் வர கூடியதாக

பொறுமை [*hupomonēn* என்ற வார்த்தை “உறுதியாகத் தரித்திருத்தல்” என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] இதன் பொருள் கோழைத்தனமில்லாத அல்லது மனச்சோர்வற்ற நிலை யுத்த நேரத்தில் படை வீரர்களுக்குச் சொல்லப்படுவது போல. “தொடர்ந்து செல்லுதல்,” சகித்தல் தொடர்ந்து உறுதியாகத் தரித்திருத்தல் சோதனை நேரங்களில் விட்டுவிடாதிருத்தல்; நீடிய - பொறுமை [*makrothumian* “பொறுமை” என மொழிபெயர்க்கப்பட்டது] என்பது கோபம் காணப்படாமை, பழிவாங்கும் உணர்வோ, சரிக்குசரி கட்டுதலோ, நெடிய நாட்களுக்கு பகைமையை மனதில் கொண்டிருப்பதோ, மிகச் பெரிய விளைவை ஏற்படுத்துதலையோ குறிப்பிடாதசெயல். பூர்த்தி செய்யவோ ஒன்றுக் கொன்று உதவுவதற்கோ அடிக்கடி வருகிற இரண்டு வார்த்தைகள் *(2 கொரிந்தியர் 6:4, 6; 2 தீமோத்தேயு 3:10; யாக்கோபு 5:10-11)*[8] இவைகள்.

இருக்கிறது (1 தெச 1:6; ரோம 14:17), அதாவது பரிசுத்த ஆவியினால் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட பலனாகிய பரலோகத்தை பற்றிய நம்பிக்கை உபத்திரவத்திலும், சோதனையிலும் சந்தோஷத்தோடே இருக்க நம்மை செய்கிறது. ( 1 பேது 1:6,7)

a. மோசே ஒரு உதாரணம் (எபி 11:25-26)

b. சந்தேகமானது பொறுமையிலும், சாந்தத்திலும் பயந்தை ஏற்ப்படுத்தும்.

viii. எல்லா வல்லமையினாலும் பலப்படுத்தப்படவும் (வ 11)

1. பார்க்கவும் (எபே 3:16; எபே6:10-18).

**4. தேவனை ஸ்தோத்தரிப்பதற்கான காரணம் (1:12-14)**

**a. "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்திரம்" (வ 12)**

i. Inheritance = பரம்பரை சொத்து, உரிமை பொருள்

ii. நாம் தேவனுடைய பிள்ளைகளால் மாறினதால், நாம் அவருடைய சுதந்திரராய் இருக்கிறோம். (ரோம 8:15-17)

iii. நம்முடைய சுதந்திரம் பரலோகத்தில் இருக்கிறது.(1 பேது 1:4,5)

iv. இதற்கு நம்மை தேவனே தகுதிப்படுத்தினார் (2 கொரி 3:6); இதற்கு நாம் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும்.

**b. "இருளின் அதிகாரத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி" (வ 13)**

i. இருள் என்பதை பிசாசின் அதிகாரத்தை குறிக்கிறதாக இருக்கிறது

1. பிசாசு அந்தகார லோகதிபதியாக இருக்கிறான் (எபே6:12; எபே2:3;2 கொரி 4:16)

2. பிசாசு நம்மை அடிமைப்படுத்துகிறான் (எபி 2:14,15)

3. பிசாசின் கரத்திலிருந்து நம்மை விடுதலையாக்க இயேசு கிறிஸ்து வந்தார், அவர் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறார். (1 யோவா 3:8; யோவா 1:9; யோவா 9:5)

4. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்படிகிற ஒருவருடைய இருதயத்தில் சுவிசேஷம் பிரகாசிக்கிறது. (2 கொரி 4:6), நம்முடைய இருதயத்தை இருள் ஆளாதப்படிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். (லூக் 11:33-35)

5. நாம் ஒளியின் பிள்ளைகளாய் இருப்பதினால் நாம் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். (1 தெச 5:5)

**c. "குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற"(வ 13) –**

i. கிறிஸ்தவர்களாகிய நாம் அநுபவிக்கும் மிகப்பெரிய ஆசிர்வாதம், அவருடைய இராஜ்யத்தில் இருப்பதாகும். நாம் அவருடைய இராஜ்யத்தில் ஆளாக்கூடியவர்களாய் இருக்கிறோம் (ரோம 5:17)

ii. நாம் இயேசுவோடு உட்காரவைக்கப்பட்டிருக்கிறோம் (எபே2:6,7)

iii. அவருடைய இராஜ்யம் உலகத்தின் இராஜ்யங்களை விட வித்தியாசமாய் இருப்பதைப்போல அது நித்தியமானதாய் இருக்கிறது.(தானி2:44; லூக் 1:32,33)

iv. அதுவே அவருடைய சபையாக இருக்கிறது.(மத் 16:18,19)

d. **“பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது” ( வ 14)**

i. மீட்பு – redemption = பெரும் தொகை,மீட்புப்பணம் கொடுத்து விடுவி; இயேசுவின் மரணத்தின் போது சிந்தப்பட்ட அவருடைய இரத்ததினால் பாவமன்னிப்பு நமக்கு கிடைத்தது.

ii. ஞானஸ்நானம் எடுத்த போது நாம் பாவமன்னிப்பை பெற்றும், (அப் 2:38; அப் 22:16), இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது கிறிஸ்தவர்கள் அவரால் மீட்கப்படுவார்கள். (லூக் 21:27,28)

iii. நமக்கான மீட்பு இயேவிலுள்ளது (ரோம 3:24; 1 கொரி1:31; எபே 1:7), நாம் இயேசுவுக்குள் இருக்கிற வரை அவருடைய இரத்தம் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறதாய் இருக்கிறது, நாம் இயேசுவுக்குள் இருப்பதற்கு அவருடைய வாரத்தையில் நிலைத்திருக்க வேண்டும் (யோவா 15:9; யோவா 15:1-7; 1யோவா 1:6-9)

iv. இது கிருபையாக இருக்கிறது (எபே 2:1-10)

## ஆ. கிறிஸ்துவின் மகத்துவமும், ஊழியக்காரனாகிய பவுலும் (1:15-29)

1. கிறிஸ்துவின் மகத்துவம் (1:15-18)

a. “அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும்” (வ 15) – “image of the invisible God”; அதரிசனமான = பார்க்க முடியாதா; தற்சுரூபம்=image, likeness, representation, reproduction (மத் 22:20; 1 கொரி 15:49)

i. இது கிறிஸ்துவின் தேவத்துவத்தை காண்பிக்கிறது (கொலோ 2:9), இயேசு கிறிஸ்து பிதாவாகிய தேவனாக இல்லை, மாறாக அவர் பிதாவுக்கு சமமானவராய், அவருடைய சாயாலக இருக்கிறார் (2 கொரி 4:4), இயேசு மாம்சத்தில் வந்த தேவனாய் இருக்கிறார் ( 1 தீமோ 3:16); இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை இந்த பூமியில் தேவனை காண்பித்தது. (யோவா 1:18)பார்க்கவும் எபி1:3

b. **“சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்” (வ 15) –**

i. இயேசு கிறிஸ்து என்றென்றும் இருக்கிற நித்திய பிதா என வேதாகமம் போதிக்கிறது. (மீகா 5:2), இயேசுவுக்கு ஒரு தொடக்கம் இருக்க வேண்டியதில்லை அவர் அநாதியாய் இருக்கிறவர். அவருக்கு தொடக்கமுல்லை, முடிவுமில்லை ( எபி 7:1-3)

ii. இது இயேசுவின் உயிர்தெழுதலைக் குறிக்கிறதாக இருக்கிறது. மகிமையுள்ள உயிர்தெழுந்த சரீரத்தை பெற்ற முதலாவது நபர் இயேசுவே. (வ 18) (வெளி 1:5)

c. அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது (வ 16)

d. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர் ( வ 17)

e. சபைக்கு தலையானவர் (வ 18)

f. நம்மை தேவனோடு ஒப்புரவாக்கி கொண்டவர் (வ 20,21) – தேவனோடு நம்முடைய உறவை பொறுத்த வரையில், நம்முடைய துற்கிரியைகள் மனதில் நம்மை சத்துருக்களாய் வைத்திருந்தது (எபே 4:17,18; யாக் 4:4), ஆனால் இயேசுவின் மரணம் நம்மை தேவனுடைய பிள்ளைகளாய் மாற்றியிருக்கிறது. (ரோம 5:10), இப்போழுது மனதில் நாம் தேவனுடைய பிள்ளைகள் (ரோம 8:15,16; ரோம 8:29) – எபே 5:27

2. ஊழியக்காரனான பவுல் (1:22-29)

a. "சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கை" (வ 22) – கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய மரணத்தின் மீதும், அதன் பின்பு நமக்கு இருக்கும் நித்தியஜீவனை குறித்த நம்பிக்கைவுடையவர்களாய் இருக்கிறோம். (நீதி 14:32; 2 கொரி 5:1-10); இந்த நம்பிக்கை நமக்கு சுவிசேஷத்தினால் வந்தது. (2 தீமோ 1:10). அந்த நம்பிக்கையினால் சுவிசேஷத்திற்கு நாம் கீழ்படித்ததினால் நாம் இரட்சிப்பட்டிருக்கிறோம் (1 கொரி 15:1,2). ஆனால் நாம் தொடர்ந்து அதில் உறுதியாய் இருப்பது அவசியம்.

i. "அப்படியாகும்" – சுவிசேஷத்தினால் வந்த நம்பிக்கையில், நாம் உறுதியாயும், அசையாமலும், ஸ்திரமாயும், உறுதியாயும், விசுவாசத்தில் நிலைத்திருக்கும் போது, நாம் பரிசுத்தராகவும், குற்றமற்றவராகவும், கண்டிக்கப்படாதவர்களாயும் இருப்போம். (எபி 3:14)

b. (வ 23-29) – சுவிசேஷமானது எல்லா மனிதருக்குமானது, எல்லா மனிதருமே இரட்சிக்கப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார். ( 1 தீமோ 2:4), இரட்சிக்கப்படுவதற்கான நம்பிக்கை சுவிசேஷத்தினால் தான் வரும், அந்த நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக தான் பவுல் ஊழியக்காரனயாய் இருக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷமே ஒரு மனிதனை ஊழியக்காரனாய் மாற்றுகிறது. ( வ 25,26)

i. பவுல் தன்னுடைய வேலையின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தார், அதற்காக அவர் பாடுகளை அநுபவித்தார். ( வ 24).

1. அவர் சுவிசேஷத்தின் நிமித்தம் பாதகன் போல கட்டப்பட்டார், துன்பத்தை அநுபவித்தார். ( 2 தீமோ 2:9)

   a. பாதகன் – male factor, evil doer – தவறான, குற்றவாளி, தீங்குண்டாக்குபவன். (அப் 22:22; அப் 26:24,25)
      i. இயேசுவைப் போல (லூக் 23:32,33,39)

2. “தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின் படியே” (வ 25,26)
   a. உத்தியோகம் – dispensation = விநியோகம்; stewardship = உக்கிராணக்காரன்; (லூக் 16:1); “பொறுப்பாளி” என்பதை அர்த்தப்படுத்துகிறது. (1 கொரி 4:1-2)
   b. பவுலிடம் தேவன் சுவிசேஷத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார், (எபே 1:10; எபே 3:1-11) இந்த இரகசியத்தை பரிசுத்தவான்களுக்கு தெரியப்படுத்துவதே பவுலின் வேலையாக இருந்தது. (கொலோ 1:27).பவுல் மறைந்து வைக்க முடியாது. (அப் 20:26; 1 கொரி 9:16,17)
3. இயேசுவே நம்முடைய நம்பிக்கை (வ 27; 1 தீமோ1:1)
   a. கிறிஸ்துவை சேராதவர்கள் நம்பிக்கையில்லாதவர்கள் (எபே 2:12)
   b. தீத்து 2:13
4. “தேறினவனாக நிறுத்தும் படிக்கு” – perfect – பூரணமான, முற்றுப்பெற்ற, முழுமைப்பெற்ற, முழு நிறைவாக்கு, குறைபாடற்ற
   a. இயேசுவின் நோக்கமாய் இருந்தது. (யோவா 10:10; எபி 10:14)
   b. வேதாகமத்தின் நோக்கமாய் இருந்தது ( 2தீமோ 3:16,17)
   c. எபே 4:14-16
   d. இதுவே ஒரு ஊழியரின் நோக்கமாய் இருக்க வேண்டும் (வ 28,29; கொலோ 4:12).

## அதிகாரம் இரண்டு

## 2:1-23

### அ. பவுலின் எச்சரிப்பு: (2:1-23)

1. பவுலின் விருப்பம் (2:1-3)
   - a. “போராட்டம்” (வ 1) – conflict, fight, contention, race – மோதல், சச்சரவு.
     - i. பவுல் தன்னுடைய இலக்கையும், நோக்கத்தை மற்றும் விருப்பத்தையும் அடைவதற்கு போராடினார். (1:28); இந்த போராட்டத்தில் பவுலுக்கு பெலனாய் இருந்தது, அவருக்குள் இருந்த வல்லமை தான். (1:29; எபே 3:16, 20); எபே 6:10,12). பவுலின் விருப்பம் எந்த மனுசனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்துவதாக இருந்தது, (1:28; 4:12), பவுல் தன்னுடைய வார்த்தைகளை கேட்பவர்கள் தங்களுக்கு பின்பாக கோஷம் போடுபவர்களாய் இல்லாமல், அவர்கள் கிறிஸ்துவைப்போல தேறினவர்களாய் இருக்கும் படி விரும்பினார் என்பதோடு, அதற்காக போராடினார்.

**குறிப்பு:** *தனது ஊழியத்தில் பவுலின் எண்ணம் எதுவாக இருந்தது? தன்னால் இயன்ற வரை ஒவ்வொருவருக்காகவும் ஊழியம் செய்யும் எண்ணம் அவருக்கு*



*இருந்தது (ரோமர் 1:14, 15) - அவருக்கு பவுலால் சந்திக்கப்படாதவர்களாயினும் கூட “தனது நிருபத்தின் மூலம் அவர்களுக்குப் போதிக்க முடிந்தது” (1 கொரிந்தியர் 9:16).*

1. இருதயம் தேற்றப்பட வேண்டும் (வ 2) – இருதயங்கள் தேற்றப்பட வேண்டும் என்பதன் அர்த்தம் என்ன?; ஒருவருடைய இருதயம் எப்பொழுது தேற்றப்பட வேண்டும்? மத் 11:28,29. பவுலின் இலக்கு எந்த மனுசனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்துவதாக இருந்தது ( கொலோ 1:28), தேறினவனாக இருப்பது என்பது எளிதான காரியமாக இருப்பதில்லை, பவுல் அவர்களின் உள்ளான மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுத்தார். சரீர பலத்தை விட நம்முடைய இருதயமே பெலமுடையதாக இருக்க வேண்டும் (எபே 6:13) பார்க்கவும் 2 கொரி 1:3-10. பலவினமான மனது எப்படி தேறினதாக இருக்க முடியும். இருதயம் என்பது சிந்தனை,

மனதை குறிக்கிறதாக இருக்கிறது (எபி 4:12); நம்முடைய இருதயத்தை காத்துக்கொள்ள வேண்டும் (நீதி 4:23).

2. அன்பினால் இணைக்கப்பட வேண்டும் (வ 2) – மீண்டும், தேறினவனர்களாய் இருப்பதற்கு, நாம்(அவர்கள்) அன்பினால் இணைக்கப்பட்டு இருக்க வேண்டும். (பிர 4:9-13). நமக்கான அணியை(TEAM) தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார். (1 கொரி 1:9.10). பார்க்கவும் பிலிப்பியர் 2:1,2. அன்புதான் நம் எல்லாரையும் இணைக்க கூடியதாக இருக்க வேண்டும். (ஓசி 11:4; யோவான் 12:32)

3. **“இரகசியத்தை அறிந்துக்கொள்கிற உணர்வின் பூரண நிச்சியத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே” (வ 2) –** இரகசியம் என்னும் வார்த்தையை பவுல் மீண்டும் இங்கு பயன்படுத்துகிறார். கொலோ 1:27. பவுல் இந்த இரகசியத்தை எல்லா மனிதருக்கும் தெரியப்படுத்தவே ஊழியக்காரனாய் இருக்கிறார். (எபே 3:1-10). அந்த இரகசியம் இயேசு கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷமாய் இருக்கிறது. (ரோம 16:25-26). **உணர்வின் பூரண நிச்சயம் = Full assurance of understanding to the acknowledgement of the mystry.** தேறினவர்களாய் இருப்பது என்பது, கண்மூடித்தனமானது அல்ல, மாறாக அது, பூரண நிச்சயத்தினுடையதாக இருக்க வேண்டும். ஒருவர் தான் எதற்காக ஒரு காரியத்தை செய்கிறார் என தெரியாத போது, அவர் அதை நிறைவு செய்ய முடியுமா? நாம் இரகசித்தை அறிந்து கொள்வது மாத்திரமல்லமால், அந்த உணர்வின் (Understanding – புரிந்துக்கொள்ளுதல்) உறுதியான நிச்சயமுடையவர்களாய் இருக்க வேண்டும்.( ஏசா 43:10). நம்முடைய உண்மையான ஐசுவரியம் நமக்கு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (எபே 3:8). அவருடைய கிருபை, இரக்கம் , மகிமை (ரோம 2:4; எபே 1:7; ரோம9:23; எபே 1:18; எபே 2:4). உண்மையான ஐசுவரியம் கிறிஸ்துவையும், அவருக்குள் நமக்கு இருக்கிற ஆசிர்வாதங்களை அறிந்துக்கொள்வதில் இருக்கிறது என்பதோடு, அந்த ஐசுவரியத்திற்குரியவன் என்பதில் நிச்சயமுடையவகளாய் இருக்க வேண்டும். பார்க்கவும்( எபே 4:17-20). அறியாமை நம்மையும் தேவனையும் அந்நியராய் மாற்றுகிறது, (எபே 4:18 = கொலோ 1:21).

பார்க்கவும் 2 கொரிந்தியர் 4:4-6. அறிந்துக்கொள்வது எவ்வளவு முக்கியமானதோ, அதைப்போல நிச்சயமுடையவர்களாய் இருப்பது அவசியம்.

b. நமக்கு தேவையானவை எல்லாம் கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது (வ 3)

2. **தலையை பற்றிக்கொள்ளும் படி போதனையும், கள்ள போதகத்தை குறித்து எச்சரிப்பும் (2:4-23)**

   a. "நயவசனிப்பினாலே = Persuasive = Enticing -கவர்ச்சியான மற்றும் ஆர்வத்தைத் தூண்டுகிற, கவர்ச்சியூட்டி இழுக்கிற மயக்கித் தன்வசப்படுத்துகிற", "வஞ்சியாதபடிக்கு = beguile, deceive - ஏமாற்றப்படுதல் " (வ 4) – நாம் தேறினவர்களாய் இருக்க வேண்டும் என்பதற்கான அவசியமாய் இருப்பது, நாம் ஏமாற்றப்பட கூடாது என்பது தான். கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஞானத்தையும், அறிவையும் பயன்படுத்தி நாம் வளர வேண்டியது தான் நாம் ஏமாற்றப்படாமல் இருப்பதற்கு ஒரு வழியாக இருக்கிறது. (எபே 4:14-16; 2 கொரி 11:2,3). ஒருவர் தேறினவர் என்பது அவர் எடுக்கும் முடிவுகளின் மூலமாய் தெரியவரும், அவர் நன்மை மற்றும் தீமை பிரித்து பார்த்து, சரியான முடிவை எடுக்க கூடியவராய் இருக்க வேண்டும். இதிலிருந்தே அவர் வளர்ந்தவர் என்பது தெரியவரும். எபிரெயர் 5:13,14.

   b. **கொலோசேயர்களை பற்றி பவுல் சந்தோஷம் (வ 5) –** இந்த சபையின் ஊழியக்காரனான எப்பாப்பிரா இந்த சபை பற்றிய நல்ல விசேஷயங்களை அவர் பவுலுக்கு தெரியப்படுத்திருந்தார். (கொலோ 1:6-8) அல்லது இவர்களின் நல்ல குணங்கள் ஆவியானவர் மூலமாயும் தெரிய வந்திருக்கலாம். அவர்கள் **"ஒழுங்கை = dignity =** பிறர் மதிக்கும் வண்ணம் அமைந்துற்ற அமைதியானதும் பொறுப்புணர்ச்சி வாய்ந்ததுமான நடத்தை. கௌரவமான நடத்தை **"** குறித்து சந்தோஷப்பட்டார். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒழுங்காய் இருக்க வேண்டும் என்பது நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறது. ஆராதனையிலும் ( 1 கொரி 14:40); வாழ்க்கையிலும் (பிலி 3:16; ரோம 13:13), உபதேசத்திலும் (தீத் 2:1). நாம் ஒழுங்கைகாய் நடந்துக்கொள்வதள்கு கிறிஸ்துவின் வசனத்தினால் நடக்க வேண்டும். (பிலி 1:27) பார்க்கவும் 2 தீமோ 3:16,17. **"விசுவாசத்தின் உறுதி" –** இவர்கள் ஒழுங்காய் இருந்தது போல விசுவாசத்தில் உறுதியாய் இருந்தார்கள். ஆனால் விசுவாசத்தில் உறுதியாய் இருப்பது மாத்திரம் போதாது, தொடர்ந்து வளர வேண்டியது அவசியமாகிறது.(வ 6)

c. **“ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக” (வ 6,7) –** கொலோசேயர்களிடம் ஒழுங்கும், விசுவாச உறுதி இருந்த போதிலும், அவர்களிடம் என்ன எதிர்ப்பார்க்கபட்டது?

i. **“அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும்”-** ஒரு செடியானது, வேர் கொண்டு இருப்பது என்பது அதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. ஏனென்றால், அதற்கான ஊட்டசத்துகளும், தண்ணீரும், வளர்ச்சிக்கு தேவையான எல்லாம் அந்த செடி எங்கே வேர்க்கொண்டிருக்கிறது என்பதிலிருந்து தான் அதற்கு கிடைக்கும், கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவுக்குள் வேர்க்கொண்டவர்களாக இருக்கிறோம். இது நமக்கு தேவையான எல்லாம் அவருக்குள் நமக்கு கிடைக்கிறது என்பதை காண்பிக்கிறது. (கொலோ 2:3) வேர்க்கொண்டிருப்பது என்பது வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொண்டிருந்த போதிலும், அது அந்த செடிக்கு பாதுகாப்பை தருகிறது எபே 3:17.

ii. **“அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்” -** கிறிஸ்தவர்கள், தேவனுடைய கட்டடமாய் இருக்கிறார்கள், அங்கே அவர் வாசம்பபண்ணுகிறார். (எபே 2:19-22). நாம் ஜீவனுள்ள கற்களைப்போல இருக்கிறோம் (1 பேது 2:5), நாம் கிறிஸ்துவின் மீது கட்டப்பட்டுவருகிறோம். இது தொடர்ந்து நடக்க கூடிய ஒரு காரியமாக பார்க்கிறோம்.

iii. **“அவருக்குள் நடந்துக்கொண்டு”-** இலக்கை நோக்கி தொடருதல் (பிலி 3:12-14). நாம் இயேசுவைப்போல நடந்துக்கொள்ள வேண்டும் (1 யோவான் 1:5-7; 1 யோவா 2:6)

iv. **“போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு” –** போதிக்கபட்டத்தில் அசையால் உறுதியாய் இருப்பது.(1 கொரி 15:58). பின்வாங்கமல் இருப்பது. (பிலி 1:27). பார்க்கவும் யுதா 20, எபி 3:14. கிறிஸ்துவுக்குள் வளர்கிறவர்களாய் இருக்கும் போது, உபத்திரவமும், பாடுகளும் மற்றும் சோதனைகளும் பெருக கூடியதாக இருக்கும், தோல்விகள் மற்றும் மன சோர்வுகள் இருக்கும், இவைகளில் நாம் வெற்றிக்கொள்ள வேண்டுமானல் நாம் விசுவாசத்தில் உறுதிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் (தீத் 1:9). சூழ்நிலைகளும், நிலைமைகளும் மாறும் போது, தனக்கு போதிக்கப்பட்ட வசனத்தில் இருந்து மாறிவிட கூடாது.

v. **“ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக” –** எப்பொழுது ஒருவருக்குள் நன்றிவுணர்வு வரும்? கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நின்றுவிட கூடிய ஒரு காரியர் அல்ல! அது தொடர்ந்து வளர கூடிய காரியமாக இருக்கிறது. (பிலி 3:12-14). நான் விசுவாசத்தில் உறுதியாக இருப்பது மாத்திரம் அல்ல, அதிலே பெருக

வேண்டியது அவசியம். நாம் தேவனுக்கு நன்றி கூறுவது என்பது அவசியமாகிறது. (கொலோ3:15,17; கொலோ 4:2)பார்க்கவும் எபே 5:4; பிலி4:6.